# வஹ்ஹாபி

**'வஹ்ஹாபி'** என்று சொல்லக் கேட்டவுடன், அப்பாவி முஸ்லிம்கள் அதிர்ச்சிக்குள்ளாகிறார்கள்; வெறுப்புடன் நோக்குகிறார்கள்; கேட்கக் கூடாததைக் கேட்டுவிட்டதாக நடுங்குகிறார்கள்.

அல்லாஹ்வின் 99 திருப்பெயர்களில் ஒன்றான இந்த **'வஹ்ஹாப்'** என்னும் பெயர் முஸ்லிம்களுக்கு வெறுப்பை உண்டாக்குவதன் மர்மம் என்ன? அப்படிப்பட்ட பொருளற்ற வெறுப்பை உண்டாக்கியவர்கள் யார்? ஏன் உண்டாக்கினார் கள்? என்ற கேள்விகளின் விளக்கங்களை அப்பாவி முஸ்லிம்களுக்குத் தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளோம் நாம்.

**'வஹ்ஹாப்'** என்றால் அளவில்லாத கொடையாளன் என்ற பொருளைத் தரும்; அல்லாஹ்வின் அழகிய திருப் பெயர்களின் ஒன்று இது. அப்படியானால், **'வஹ்ஹாபி'** என்றால் அல்லாஹுவைச் சார்ந்தவன் என்ற பொருளையே தரும். இந்நிலையில் ஒருவன் தன்னை வஹ்ஹாபி இல்லை என்றால், அவன் நிச்சயமாக அல்லாஹ்வைச் சார்ந்தவ னல்லன்; ஷைத்தானைச் சார்ந்த வனாகத்தான் இருக்கமுடியும். ஒரு உண்மை முஸ்லிம் தன்னை **'வஹ்ஹாபி'** இல்லை என்று ஒருக்காலும் சொல்லவே மாட்டான்.

புனிதமான அல்லாஹ்வின் பெயரைக் காட்டி அப்பாவி முஸ்லிம்களை ஏமாற்றக்கூடிய கூட்டம் (சத்தியத்தைப் போதிப்பவர்களை 'வஹ்ஹாபி' என்று பூச்சாண்டி காட்டும் கூட்டம்) எப்படிப்பட்ட வழிகெட்ட கூட்டமாக இருக்கும் என்பதைச் சாதாரண அறிவு படைத்தவனும் அறிந்து கொள்ள முடியும். பாமர முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காகப் பயமுறுத்திப் பயன் அடைவதற்காக வேண்டியே இவர்களால் **'வஹ்ஹாபி'** என்ற பூச்சாண்டி காட்டப்படுகின்றது. குழந்தை களை ஏமாற்ற அறிவில்லாத பெற்றோர்கள், **'அதோ பூச்சாண்டி வருகிறான்'** என்று பயமுறுத்துவது போல், அப்பாவி முஸ்லிம்களை வாயில்லாக் குழந்தைகளாக்கு கிறார்கள், இந்த **'வஹ்ஹாபி'** பூச்சாண்டி காட்டுபவர்கள். இதற்கு ஆதாரமாகத் தேவ்பந்த் ஆலிம் ஒருவர் சொன்ன சிறந்த கதை ஒன்றையே இங்கு விளக்க விரும்புகிறோம்.

ஓர் ஊரில் ஒரு வியாபாரி. அவன் மளிகைக் கடை வைத்து நடத்தி வந்தான். நல்ல வியாபாரம்; ஊர் மக்கள் எல்லோரும் அந்தக் கடையிலேயே பொருள்கள் வாங்கி வந்தார்கள். அந்த ஊர்ப் பள்ளிவாசல் இமாமும் வரவு, செலவு வைத்திருந்தார். ஆனால் ஒழுங்காகப் பணம் கொடுப்பதில்லை. வியாபாரி பலமுறை கேட்டுப் பார்த்தான். கண்டித்துப் பார்த்தான். இமாம் ஒழுங்குக்கு வருவதாகத் தெரியவில்லை. ஆத்திரத்தில் இமாமுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்திக் கொண்டான். வந்ததே சினம் இமாமுக்கு. உடனே பள்ளிவாசலில் மக்களுக்கு உரையாற்றும்போது **'அந்த மளிகைக் கடைக்காரன் 'வஹ்ஹாபி' ஆகிவிட்டான்!'** யாரும் அவனிடம் சாமான்கள் வாங்காதீர்கள் என்று ஒரு போடு போட்டார்! அவ்வளவுதான் பாவம் அப்பாவி முஸ்லிம்கள். **'வஹ்ஹாபி'** என்றால் ஏதோ மிகவும் ஆபத்தான ஒரு சமாச்சாரம் என்று கருதிக் கொண்டு, அந்தக் கடைப்பக்கமே போகவில்லை. வியாபாரமே முடங்கிவிட்டது. வியாபாரிக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. விசாரித்துப் பார்த்ததில் இமாம் தன்னை **'வஹ்ஹாபி'** என்று சொல்லியது தெரிந்தது. விளங்கிக் கொண்டான் வியாபாரி. இமாமைக் கூப்பிட்டு, **"நீங்கள் பணம் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. நீங்களும் சாமான்கள் வாங்கிக் கொள்ளுங்கள். மக்களையும் என் கடைக்கு வந்து சாமான்கள் வாங்கச் சொல்லுங்கள்"** என்று மிகவும் பணிவுடன் கேட்டுக் கொண்டான். இமாமுக்குப் பெருமகிழ்ச்சி. பஸ் டிரைவருக்கும், கண்டக்டருக்கும் ஓசியில் ஹோட்டலில் சாப்பாடு கிடைப்பதுபோல், இவருக்கும் ஓசியில் மளிகைச் சாமான்கள் கிடைக்கப் போகிறதே என்ற மகிழ்ச்சியில், அடுத்து உரையாற்றும்போது **'அந்த வியாபாரி 'வஹ்ஹாபி'**யை விட்டும் தௌபாச் செய்து விட்டான். ஆகவே நீங்கள் எல்லாம் தாராளமாகப் பொருள்கள் வாங்கிக் கொள்ளலாம். அவனிடமே பொருள்கள் வாங்குங்கள். அதிலேதான் **'பரக்கத்'** இருக்கிறது என்று பிரகடனமே செய்துவிட்டார். இதுதான் சில பள்ளிவாசல் இமாம்களின் **'வஹ்ஹாபி'** பூச்சாண்டியின் அந்தரங்க ரகசியம். மக்களை ஏமாற்றிச் சுரண்டுவதற்கென்றே இவர்களால் கற்பனையாகக் கட்டி விடப்பட்டதே, இந்த **'வஹ்ஹாபி'** பூச்சாண்டி என்பதை அன்புச் சகோதர சகோதரிகள் விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

**1924** வரை உலக வல்லரசாகவும் முஸ்லிம் நாடுகளின் தலைமையகமாகவும் திகழ்ந்து, பெயரளவில் **'கலீஃபா'** முறையைப் பிரகடனப்படுத்திக் கொண்ட துருக்கியர்களின் பிற்போக்கான நிலைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள் (குறிப்பாக சவூதி) அரேபியர்கள். அதனை எதிர்த்த அவர்களைப் பற்றித் தவறான கருத்தை மற்ற முஸ்லிம்களிடம் (குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிலோன் நாடுகளில்) பரப்பத் துருக்கி அரசும், அந்த நாட்டின் போலி உலமாக்களும் நாடினர். அவர்களிடம் இருந்த அரசு சக்தியையும் பொருளையும் இதற்காக மிகுதியாகச் செலவழித்து, நம் முஸ்லிம்களிடையே ஒரு கசப்பான நச்சு உணர்வை **'வஹ்ஹாபிகள் இவர்கள்'** எனப் பரப்பி வந்தனர். இதுதான் **'வஹ்ஹாபி'** பூச்சாண்டியின் வரலாற்றுப் பின்னணி ஆகும். பகுத்துப் பிரித்தறிந்து எதனையும் ஆய்ந்து ஆதாரம் தேடி வாழ விருப்பப்படும் இக்காலத்திலும், எவ்வித ஆதாரமுமின்றி 'வஹ்ஹாபி' என்று பூச்சாண்டி காட்டுவது விந்தையிலும் விந்தையே!

இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களைப் பின்பற்றுவோர் **'வஹ்ஹாபி'** என்று அழைக்கப்படுகின்றனர் என்று சொல்வார்களானால், இதுவும் இட்டுக் கட்டப்பட்ட கட்டுக்கதையே யாகும். காரணம் அல்லாஹு(ஜல்) இறுதி நபி முஹம்மது(ஸல்) அவர்களை மட்டுமே பின்பற்றும்படி கட்டளை யிட்டிருக்கிறான். ஆகவே, வஹீவரப் பெற்ற நபி(ஸல்) அவர்களை மட்டுமே பின்பற்று வதாக அறிவுபடைத்த முஸ்லிம்களின் '**அகீதா**'வாகக் (கொள்கை) கொள்ள முடியும். நபிமார்களைப் போல் இமாம்களுக்கு வஹீ வரவும் இல்லை. இனி வரப்போவது மில்லை. ஆக, எந்த இமாமையும் பின்பற்றுவதாக **'அகீதா'** (கொள்கை) கொள்ள முடியாது.

இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்கள் பிறந்த ஹிஜ்ரி **1115**-ம் ஆண்டின் (கி.பி. **1703**) தொடக்கத்தில் அனாச்சாரமும், அநியாயமும் நாடெங்கும் பரந்து, அறியாமையும் அஞ்ஞானமும் மக்களிடையே பெருகி, இஸ்லாத்தில் இல்லாத புதுமைகள் புரிவதிலும், சமாதி, மரங்கள் போன்றவற்றைக் கடவுளென வணங்கியும், மிகவும் மோசமான நிலையில் வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த அவலநிலை பெரும்பாலான

மக்களைத் தாக்கி, அதனால் சமுதாயம் இழிநிலையிலிருந்த தென்பது வரலாற்று ஆசிரியர்களும், இஸ்லாமிய உலக ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்ற முடிவாகும். இந்தச் சமயத்தில் அல்குர்ஆன், நபி(ஸல்) அவர்கள் காட்டிய வழியில் மட்டுமே வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்று இமாம் அவர்கள், பல எதிர்ப்புகளுக்கிடையே பிரச்சாரம் செய்தார்கள். இவர்களாகப் புதிதாக எதையும் சேர்க்காமல், குறைக்காமல் குர்ஆன், ஹதீஸ்களை மட்டும் பின்பற்றச் சொன்ன அந்த உண்மை நிலையை அறிவுள்ள மக்கள் புரிந்து நடந்தார்கள்.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து சென்ற, மரியாதைக்குரிய நான்கு இமாம்களையே பின்பற்றுவதாக **'அகீதா'** (கொள்கை) கொள்ளமுடியாது என்று சொல்லும் அவர்கள் (அதாவது **வஹ்ஹாபி** என்று மற்றவர்களால் அழைக்கப்படுபவர்கள்), சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து சென்ற இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றுவதாக, எப்படி **'அகீதா'** (கொள்கை) கொள்வார்கள்?

இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்கள், இஸ்லாத்தை நிறைவாக்கித்தரவில்லை. அவர்களுக்குப் பின்னர் இஸ்லாத்தை நிறைவு செய்ய இமாம்கள் வேண்டும் என்று எண்ணும் குறை மதிபடைத்தவர்களே ஒரு இமாமைப் பின்பற்றுவதாக 'அகீதா' கொள்ளமுடியும். மார்க்கத்தில் விதிக்கவும் விலக்கவும் உள்ள உரிமை அல்லாஹ்(ஜல்) வுக்கு மட்டுமே சொந்தம், அல்லாஹ்வின் கட்டளைப் படி நபி(ஸல்) அவர்களை மட்டுமே இமாமாக **'அகீதா'** (கொள்கை) கொள்வதே சரி; மாற்றமாக அல்லாஹு(ஜல்) கட்டளையிடாத வேறு யாரையும் இமாமாக **'அகீதா'** கொள்வது, இன்னொரு அல்லாஹ் இருப்பதாக நம்புவதாகும். அது வெளிப்படையான 'ஷிர்க்' (அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்) ஆகும் என்பதைத் தெளிவாக விளங்கி அதை விட்டுத் **'தௌபாச்'** செய்து விடுவார்கள், நிறைமதி படைத்தவர்கள்.

ஆக அந்த நன்மக்கள் இமாம் முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றுவதாகச் சொல்வது, அவர்கள் மீது சுமத்தப்படும் வீண் பழியாகும். பழி சுமத்துவோர் தொடக்கத்தில் அவர் பெயர் **'முஹம்மது'**, என்பதால், **'முஹம்மதீ'** என்றே சொல்லத் தொடங்கினர். இது இறுதி

நபி(ஸல்) அவர்களை அவமதிப்பதாகும் என்ற எதிர்ப்புக் கிளம்பியவுடன், இந்த அறிவாளிகள் (?) இமாம் முஹம்மது அவர்களின் தந்தை அப்துல் வஹ்ஹாப் அவர்களின் பெயரைக் கொண்டு அழைக்கத் தொடங்கினர். அவர்களின் அறிவின் ஆழத்தை அறிந்து கொள்ளுங்கள். அவர்களின் நோக்கப்படி **'முஹம்மதீ'** என்று அழைப்பது, நபி(ஸல்) அவர்களை அவமதிப்பதாகும் என்று கருதினார்களேயல்லாமல், **'வஹ்ஹாபி'** என்றழைப்பது அல்லாஹ்வையே அவமதிப்ப தாகுமே என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அல்லாஹ்(ஜல்) அவர்களின் அறிவை மழுங்கச் செய்து, இங்கும் உண்மை முஸ்லிம்கள் அல்லாஹ்வைச் சார்ந்தவர்கள் என்று அவர்களின் பகைவர்களாலேயே அழைக்கப்படும். பாக்கியத்தைக் கொடுத்தான். அவர்கள் இவர்களை **'வஹ்ஹாபி'** என்று திட்டுவதாக எண்ணிக்கொண்டு இவர்களுக்கு நல்வாழ்த்துக்களே கூறுகின்றனர். அல்ஹம்துலில்லாஹ்.

ஆக! **'வஹ்ஹாபி'** என்பது நல்வாழ்த்தே யன்றித், திட்டுவது அன்று என்பதைப் பாமர முஸ்லிம்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்து இந்த அறிவாளிகள் (?) குறிப்பிட்ட நான்கு இமாம்களை அளவுக்கதிகமாகப் புகழ்ந்து, பின்னர் வந்த இமாம்களான இப்னு தைமிய்யா, இப்னுல் கையிம், இப்னுகதீர், இப்னு அப்துல் வஹ்ஹாப் போன்றோரை இகழ்கின்றனர். இது யூத, கிறிஸ்தவர்களின் பழக்கமாகும். அவர்களது பழக்கத்தில் முன்னர் உள்ள நபியை அளவு கடந்து புகழ்ந்து பின்னர் உள்ள நபியை இகழ்வார்கள். ஆனால் எல்லா நபிமார்களும் **'லாயிலாக இல்லல்லாஹ்'** என்ற ஒரே போதனையையே செய்தார்கள்.

இறுதி நபி முஹம்மது(ஸல்) அவர்களுக்குப்பின் நபி இல்லை; நபிமார்களின் பணியை நபி(ஸல்) அவர்களின் உம்மத்து செய்யக் கடமைப்பட்டுள்ளது (3:110). இந்த உம்மத்தில் தோன்றுபவர்களே இமாம்கள். யூத, கிறிஸ்தவர்கள் தங்களின் அறியாமையின் காரணமாக முன்னைய நபியைப் புகழ்ந்து, பின்னைய நபியை இகழ்ந்தது போல், இவர்களும் முன்னைய இமாம்களைப் புகழ்ந்து, பின்னைய இமாம்களை இகழ்கிறார்கள். உண்மையில் எல்லா இமாம்களும் குர்ஆன், ஹதீஸ் களையே போதித்துள்ளனர். அவர்கள் அனைவரது போதனைககளும்

ஒன்றே என்றும், அது ஏகத்துவமே என்பதையும் அறிஞர் கள் விளங்கிக் கொள்கிறார்கள். மார்க்கத்தைப் பிழைப் பாகக் கொண்டு, புரோகிதத் தொழில் செய்யும் வழி தவறயவர்களே இமாம்களுக்கிடையில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றார்கள்.

ஆனால் இமாம்கள் அனைவரும் மனிதர்களே; நபிமார்களைப் போல அல்லாஹ்வின் கண்காணிப்பில் அவர்கள் இருக்கவில்லை; அவர்களுக்கு வஹீயும் வந்த தில்லை; வரப்போவதும் இல்லை. நபிமார்கள் வழி சருகும் போது வஹீ மூலம் திருத்தப்பட்டார்கள். இமாம்கள் அப்படித் திருத்தப்பட்டவர்கள் அல்லர். அவர்களிலும் சில அசம்பா விதங்கள் இடம் பெற்றிருக்கலாம். ஆக ஒரு இமாமின் கூற்று, குர்ஆன், ஹதீஸ்களுக்கு மாற்றமாக இருந்தால், அந்தக் கூற்றை விட்டுவிட்டுக் குர்ஆன், ஹதீஸ்களையே பின்பற்ற ஒரு முஸ்லிம் கடமைப்பட்டுள் ளான். இதுவே எல்லா இமாம்களினதும் ஒன்றுபட்ட விருப்பமும் கூற்றும் ஆகும். இமாம்களின் பெயரால் சொல்லப்படும் கூற்றுக்கள் சில, குர்ஆனுக்கும், ஹதீஸ் களுக்கும் மாற்றமாக இருப்பது தெளிவாகத் தெரிந்த பின்னும், அந்தத் தவறான கூற்றுப்படியே நாங்கள் நடப்போம் என்று அடம் பிடிப்பவர்களை அல்லாஹ்விடமே விட்டுவிடுவோம். தீர்ப்பளிக்கும் அதிகாரம் அவனுக்கு மட்டுமே!

இறுதியாக, **1984** மார்ச் **19** திங்கட்கிழமை, 'தினமணி' நாளிதழில் +2 வகுப்பிற்கான '**வரலாறு, நவீன உலகம்**' என்ற பாடத்தில் மாதிரி வினா விடைகளில், '**வஹ்ஹாபி**' என்று அழைக்கப்படுவோர் யார்? என்ற கேள்விக்கு,

**"இஸ்லாமிய மார்க்கத்தை அதன் பழமையான தூய வடிவில் கடைபிடிப்போர்; அவர்களால் அரேபியர்களி டையே ஒற்றுமை உணர்வு அதிக மாயிற்று"**

என்று விடை அளித்திருப்பதை, அப்பாவி முஸ்லிம்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இதில் வேடிக்கை என்னவென்றால், வேற்றுச் சமயத்தாரும் '**வஹ்ஹாபி**'யைப் பற்றியும், அவர்களின் உண்மையான நிலை பற்றியும் தெளிவாகத் தெரிந்திருக்கும் வேளையில், தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள், '**வஹ்ஹாபி**'

என்று கேட்டவுடன் நடுங்குகிறார்கள் என்றால், அவர்களின் நிலை பற்றியும், அப்பாவி முஸ்லிம்களை அப்படி நடுங்கவைக் கும், தங்களை ஆலிம்கள் என்று சொல்லிக் கொள்பவர் களின் நிலை பற்றியும் என்ன முடிவுக்கு வர முடியும்? என் பதைப் பொது மக்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறோம்.

**“எங்கள் ரப்பே! எங்களுக்கு உண்மையான மார்க்கத்தை விளங்கும் ஆற்றலைக் கொடுத்து, அந்த உண்மையான மார்க்கத்தின்படிச் செயல்பட்டு, மக்களுக்கும் போதித்து உனது திருப் பொருத்தத்தை அடையும் பாக்கியத்தையும் கொடுப்பாயாக. ஆமீன்.**

வெளியீடு : **15**

நாள் : **4.4.86**